2025 – ஜீன் மாதம் 17– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 151/2024 C/W 152, 164, 165, 183 & 184 /2024*

*2025–ம் ஆண்டு ஜீன் மாதம் 17– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 5, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 5, புஷ்பா |
| கணவர் பெயர் | : | மோகன்ராஜ் |
| ஊர் | : | கிருஷ்ணாபுரம் |
| வட்டம் | : | வேப்பந்தட்டை |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | நகை மதிப்பீட்டாளர் |
| வயது | : | 41 |

<u>தேதி: **17.06.2025.**</u>

<u>**முதல் விசாரணை:–**</u>

நான் எம்சிஓபி நெம்பர் 183/2024 மனுவில் கண்ட எனது மகனான மைனர் சிவநேசன் என்பவருக்கு கார்டியன் என்ற நிலையில் இம்மனு தாக்கல் செய்துள்ளேன். மனு விபரங்கள் குறித்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன், அதை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகின்றேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் கீழ் கண்ட ஆவணங்களை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

<u>**எனது சார்பாக:–**</u>

**23)**.எனது மகன் மைனர் சிவநேசன் என்பவரின் ஆதார் அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகின்றது அது **ம.சா.ஆ.23,**

**24).** எனது ஆதார் அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகின்றது. **ம.சா.ஆ.24.**

**25).** அரியலூர் அரசு மருத்துவமனையில் இருந்து எனது மகன் மைனர் சிவநேசன் என்பவரின் பெயருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு ஜெராக்ஸ் நகல் **ம.சா.ஆ.25,** ஆக தாக்கல் செய்கின்றேன்.

எனது சாட்சியம் மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுப்படி உத்தரவாக வேண்டுகின்றேன்.

**குறுக்கு விசாரணை:– (2–ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்து நடந்த போது 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் கடைசி இருக்கையில் எனது மைனர் மகன் சிவநேசன் அமர்ந்திருந்தார். வாகனத்தில் நானும், எனது மகனும் ஒன்றாக அமர்ந்திருந்தோம். விபத்து நடந்த போது காலை சுமார் 11.00 மணியிருக்கும் என்றால் சரிதான். விபத்து நடந்த ரோடு இரண்டு பேருந்துகள் செல்லக்கூடிய அளவிற்கு அகலமான ரோடு என்றால் சரிதான். விபத்து ஒரு திருப்பத்தில் நடைபெற்றது என்றால் இல்லை. விபத்து நடந்த ரோடு நேரான ரோடு என்றால் சரிதான். எதிரே ஒரு இருசக்கர வாகனம் வருவதை பார்த்து விட்டு அதன் மேல் மோதாமல் இருப்பதற்காக திருப்பும் போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரே வந்த இருசக்கர வாகனமும் வேகமாக வந்தது என்றால் சரிதான். இருசக்கர வாகனம் வேகமாக வராமல் இருந்திருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு காரணமான இருசக்கர வாகனத்தையும், அதன் ஓட்டுநரையும் ஒரு தரப்பினராக சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த உடன் எனது மைனர் மகன் சிவநேசனை அரியலூர் அரசுமருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள், அவருக்கு ஸ்கேன் மட்டும் எடுத்து பார்த்து விட்டு காயங்கள் பெரிதாக இல்லையென்பதால் வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள். விபத்தில் எனது மகனுக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றால் சரிதான். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.3 பாலிசியில் 1–ம் எதிர்மனுதாரரின் வாகனம் லயாபிலிட்டி பாலிசி என்று போடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1–ம் எதிர்மனுதாரர் விபத்து சமயத்தில் உள்ளே அமர்ந்து

செல்லும் பயணிகளுக்கு பிரிமியம் தொகை செலுத்தாததால் பயணம் செய்த நபர்கள் 3–ம் நபர்களாக கருதமுடியாது என்றால் சரியல்ல. காயத்தின் தன்மையையும், இயலாத்தன்மையையும் மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த கால கட்டத்தில் இருந்து என் மகன் தற்போது வரை பள்ளிக்கு தொடர்ச்சியாக சென்று வருகின்றார் என்றால் 10 நாட்கள் மட்டும் விடுமுறை எடுத்திருந்தார். 1–ம் எதிர்மனுதாரர் உரிய பிரிமியம் தொகை செலுத்தாததால் 2–ம் எதிர்மனுதாரர், 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் பயணியாக பயணம் செய்த எனக்கு எந்த நஷ்டஈடும் வழங்க 2–ம் எதிர்மனுதாரர் கடமைப்பட்டவர் அல்ல என்றாலும், 2–ம் எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:– இல்லை.**

**ஒப்பம்/– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**